PPSC Circular No. : EX/14/2017

## கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், II/I ஆம் தரங்களிலுள்ள அலுவலர்களுக்கான I/II வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் – 2017 (2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் நியமனம் பெற்ற அலுவலர்களுக்கானது)

கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், II/I ஆம் தரங்களிலுள்ள அலுவலர்களுக்கான I/II வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 17.07.2017 ஆகும். **(இவ்வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்காக MN-5-2016 சம்பள அளவுத்திட்டத்திலுள்ள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.)**

02. இப்பரீட்சை செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படுமென்பதுடன் இப்பரீட்சைகளை நடாத்துதற் பொருட்டு செயலாளரினால் விதிக்கப்படும் விதிகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

03. **ஆளடையாளத்தை நிரூபித்தல்**

விண்ணப்பதாரிகள், பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வண்ணம் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

04. **தகைமைகள் :**

ஓர் அலுவலர் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே தடவையில் தோற்ற முடியாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின்,

- தரம் II பிரிவிலுள்ள அலுவலர்கள் Iவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கும்,
- தரம் I பிரிவிலுள்ள அலுவலர்கள் IIவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கும்,

தோற்ற முடியும்.

**கவனிக்க. : குறிப்பிட்ட தரத்துக்கு நியமிக்கப்பட்ட/பதவியுயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவும். அவ்வாறு கடிதப்பிரதி இல்லாது அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதோடு இது தொடர்பாக பின்னர் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படமாட்டாது.**

05. **மொழிமூலம்**

இப்பரீட்சையானது தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் அவர்களுக்குப் பொருத்தமான ஒரு மொழியை தெரிவு செய்தல் வேண்டும். விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் எக்காரணம் கொண்டும் மொழிமூலம் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

06. விண்ணப்பபத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல்கள் பிழையானவை என தெரியவரும் சந்தர்ப்பத்தில் அதற்கு விண்ணப்பதாரிகளும், விண்ணப்பங்களை உறுதிப்படுத்தும் திணைக்களத்தலைவருமே பொறுப்பாளிகளாவர்.

07. **பாடத்திட்டம்**

Iவது மற்றும் IIவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகளுக்குரிய பாடத்திட்டங்கள் (ஆங்கில மொழி மூலம்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

08. விண்ணப்பதாரி ஒருவர் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

09. பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளது பெறுபேறுகள் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் அனுப்பிவைக்கப்படும்.

10. **விண்ணப்பிக்கும் முறை**

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். உரிய மாதிரி விண்ணப்பபடிவத்துக்கு அமையாதவையும், உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவார். விண்ணப்பபடிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

11. விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து தங்கள் திணைக்களத் தலைவரூடாக **17.07.2017** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், இல. 198, உட்துறைமுக வீதி, திருகோணமலை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/14/2017** என்பதை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதைத் தவிர்த்துகொள்ளுதல் வேண்டும்.)

12. முதன் முறையாக இப்பரீட்சைக்கு தோற்றும் உத்தியோகத்தர் பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. ஏற்கனவே மேற்குறிப்பிட்ட பரீட்சைகளுக்கு தோற்றியுள்ளவர்கள், ஒரே தடவையில் இரண்டு பாடத்திற்கும் தோற்றுவதாயின் பரீட்சைக்கட்டணமாக 450/- ரூபாவும், ஒரு பாடத்திற்கு தோற்றுவதாயின் ரூபா 400/- வீதமும் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் என்ற பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) அத்துடன் எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன், இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. அதேபோன்று காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

13. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றுக்குரிய எண்களும் பின்வருமாறு :

| நகரம் | நகர எண் | நகரம் | நகர எண் |
|---|---|---|---|
| திருகோணமலை | 01 | அம்பாறை | 03 |
| மட்டக்களப்பு | 02 | கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்

14. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்க,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்.

# SYLLABUS

***1st Efficiency Bar Examination (Grade II)***

1. Local government Structure and Regional Development (2 hours) - 100 Marks
2. Principles of Social Science and Community Development (2 hours) - 100 Marks

***Local government Structure and Regional Development - Syllabus***

*Part I – Local Government Structure*

(i) Municipal Council, Urban Council and Pradeshiya Sabha Act
(ii) Financial Regulations, Establishment Code, Treasury Circulars, Public Administration Circulars and Development Circulars
(iii) As describe in the Laws of Local Government Organizations such as Municipal Council, Urban Council and Pradeshiya Sabha
(iv) Public hygiene and cleanliness specified in the Acts
(v) The provisions and procedures in practice regarding the general development activities of Local Government Organizations

*Part II – Regional Development*

(i) Regional Development and Objectives
(ii) Regional planning and practical problems
(iii) Planning implementation and control of progress developmental programs at regional level
(iv) Collection and analysis of data and different types of programme researches

***Principles of Social Science and Community Development - Syllabus***

*Part I – Community Development*

(i) Introduction to Sociology
(ii) Community Development – Objectives and basic Principles
(iii) Participating Development – basic principles and strategies
(iv) Identification and preparation of project reports, Implementation and control

*Part II – Environmental Protection*

(i) Natural Environmental Act objectives, policies and activities
(ii) Role of Local Government Organization in environmental protection and its applications
(iii) Objective and functions of District and Regional Environmental Committee
(iv) Natural Water Supply scheme – Natural Provincial policies and Provincial, District & Divisional Committees
(v) Rural water supply committee and their objectives & functions

## *2$^{nd}$ Efficiency Bar Examination (Grade I)*

- Establishment Code, Financial Regulations, Procurement Procedure and Departmental Regulations & Ordinance (3 hours) - 100 Marks

***Establishment Code, Financial Regulations, Procurement Procedure and Departmental Regulations & Ordinance - Syllabus***

*Part I – Establishment Code and amendments*

- Recruitment
- Promotions
- Scheme of Recruitment
- Monthly salary
- Reports
- Certification
- Leave
- Railway warrant
- Travel on duty
- Government quarters
- Salary loan
- Administrative regulations and procedures

*Part II – Financial Regulation and amendments*

- Expenditure and Estimates
- Consolidated funds
- Planning of expenditures
- Planning of programmes
- Preparation of estimates of annual expenditure
- Amendments in estimates of expenditure
- Supplies works and services
- Supplies custody and verification of stores
- Over stocking and unserviceable articles
- Works and services authorities for deviation

*Part III – Procurement Procedure, Departmental Regulations & Ordinance*

- Procurement and contract
- Local government Ordinance and Acts (Municipal Council, Urban Council and Pradeshiya Sabha)
- Act of 42 of 1987 – Provincial Council Act
- Organizational structure of Local Government Institutions under Eastern Province

**EX/14/2017**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், II/I ஆம் தரங்களிலுள்ள அலுவலர்களுக்கான I/II வது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் – 2017 (2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் நியமனம் பெற்ற அலுவலர்களுக்கானது)**

*பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்*
தமிழ் - T, சிங்களம் - S
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

*விண்ணப்பிக்கும் பரீட்சை*

| | |
|---|---|
| Iவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை | |
| IIவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை | |

(உரிய கூட்டினுள் ✓ இடவும்)

**பரீட்சைக்கு தோற்றும் நகர எண் :**
(13வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

01 1.1. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : (உதா : PERERA, A.B.C.)

……………………………………………………………………………………………..

1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :

……………………………………………………………………………………………..

02. 2.1. அமைச்சு/திணைக்களம்/நிறுவனத்தின் பெயர் : ……………………………………………...

2.2. அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்): ……………………...………………

……………………………………………………………………………………………..

**(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்)**

03. பால் : (பெண் - F, ஆண் - M)
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

04. 4.1. முதல் நியமனத் திகதி : ……………………………………………………………..

4.2 நியமனக்கடிதத்தின் இலக்கம் : ……………………………………………………..

4.3 தற்போதைய தரம் : ……………………………………………………………………

4.4. தற்போதைய தரத்துக்கு நியமிக்கப்பட்ட/பதவியுயர்த்தப்பட்ட திகதி : ……………………
**(இத்தரத்துக்கு நியமிக்கப்பட்ட/பதவியுயர்த்தப்பட்ட கடிதத்தின் பிரதியை இத்துடன் இணைக்கவும்)**

4.5 17.07.2017 ஆந் திகதியன்று அத்தரத்தின் சேவைக்காலம் : ………………………………...

05. மாகாண சபையினால் நியமனம் வழங்கப்படாவிடின்,
மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்பட்ட திகதி :- ……………………………………………….

06. 6.1. தேசிய அடையாள அட்டை இல :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6.2. அலுவலக தொலைபேசி இலக்கம் :- ……………………………………………………..

6.3. கையடக்க தொலைபேசி இலக்கம் :- ……………………………………………………..

07. தோற்றும் பாடம்/பாடங்கள்

1. …………………………………………………………………………………………

2. …………………………………………………………………………………………

08. 8.1. நீங்கள் பரீட்சைக்கு முதன் முதலாக தோற்றுகின்றீர்களா ? …………..………………

8.2. பணம் செலுத்திய தொகை :- ………………………………...………………………..

8.3. பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் இலக்கம் :- ……………………………………….

8.4. பற்றுச்சீட்டு பெற்றுக்கொண்ட பிரதேச செயலகம் :- ……………………………………...

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கு கழராதவாறு ஒட்டவும் |

09. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

அ. மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும்,

ஆ. பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் தகுதியுடையவனென்றும், தகுதியில்லாத பட்சத்தில் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ கண்டுபிடிக்கப்பட்டால் நான் இப்பரீட்சையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை இத்தால் உடன்படுகின்றேன்.

திகதி : ……………………… ………………………………….
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**குறிப்பு** : விண்ணப்பதாரி தமது திணைக்களத்தலைவா் அல்லது திணைக்களத்தலைவா் சாா்பாக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தா் ஒருவா் முன்னிலையில் கையொப்பம் இடுதல் வேண்டும்.

10. **கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் பணியாளரும் எனக்குத் தனிப்பட்ட ரீதியில் தெரிந்தவருமான திரு/திருமதி/செல்வி ……………………………………. என்பவா் ………………… ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டாா் என்றும், அவா் முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணத்திலிருந்து அவா் விலக்குப்பெறுதல் உசிதமானது / பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் நான் சான்றுறுதிப்படுத்துகிறேன்.

…………………………………………..
சான்றுறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் : …………………………..
பதவி : …………………………..
முகவரி : …………………………..
திகதி : …………………………..

11. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

நான் பின்வருவனவற்றைச் சான்றுப்படுத்துகின்றேன்.

(i) மேலே தரப்பட்ட தகவல்கள் சரிபார்க்கப்பட்டது மற்றும்,
(ii) அலுவலா் முன்னா் தோற்றியுள்ளாா் * / தோற்றியிருக்கவில்லை,
(iii) அலுவலா் முன்னா் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளாா் என்பதுடன் உரிய பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை அவா் ஒட்டியுள்ளாா்,
(iv) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்கு தகுதியுள்ளது.

* பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும்

…………………………………………
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் : …………………………..
பதவிப்பெயர் : …………………………..
முகவரி : …………………………..
திகதி : …………………………..